# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

## S.C.No. 118/2014

## PROSECUTION WITNESS No - PW- 1

| | | | |
|---|---|---|---|
| Name : | சீதா | Caste: | |
| Husband name | ஜெகசுப்பிரமணியன் (எ) பழனி | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of February 2026.

6 வது எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 4 வது , 9 வது எதிரிகள் இவ்வழக்கில் நீதிமன்ற காவலில் நேரில் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 2 வது எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருபவர் ஆஜர்படுத்தப்படவில்லை.

**<u>முதல் விசாரணை :</u>**

எனக்கு சொந்த ஊர் ஒய்யவந்தான் கிராமம் ஆகும். எனது கணவர் பெயர் ஜெகசுப்பிரமணியன் (எ) பழனி ஆகும். இவ்வழக்கில் இறந்த நபர் என் கணவர் தான். எனக்கும் என் கணவருக்கும் இவ்வழக்கு சம்பவம் நடப்பதற்கு சுமார் 4 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்து பொன்ஈஸ்வர மூர்த்தி என்ற ஒரு ஆண்குழந்தை உள்ளது. இவ்வழக்கின் புகார்தாரரும் 1வது சாட்சியுமான காங்கேயவேலு என்பவர் எனது தந்தை ஆவார். அவர் தற்போது காலமாகிவிட்டார். இவ்வழக்கின் எதிரிகள் அனைவரையும் தெரியும். குறிப்பாக இவ்வழக்கின் எதிரிகள் பன்னீர் செல்வம், காளீஸ்வரன், மணி மற்றும் அய்யப்பன், பச்சைப்பிள்ளை ஆகிய எதிரிகள் அனைவரையும் எனக்கு நன்கு தெரியும். அவர்கள் எனக்கு தூரத்து உறவினர்கள் தான். இவ்வழக்கின் எதிரி பன்னீர்செல்வம் என்பவர் எங்கள் ஊர் உடைகுளம் பஞ்சாயத்து தலைவராக இருந்தார். அவர் தற்போது உயிருடன் இல்லை. அவர் தலைவராக இருந்த காலத்தில் பஞ்சாயத்து பணத்தை கையாடல் செய்ததாக பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கு எனது கணவர் பழனி தான் காரணம் என்று அவர் மீது கோவமாக இருந்தார். இவ்வழக்கின் சம்பவ நிகழ்ச்சிக்கு 10 நாட்களுக்கு முன் ஊர் பஞ்சாயத்து பொதுக்கூட்டம் நடந்ததில் பன்னீர் செல்வம் என்பவர் அவருக்கு சொந்தமாக காளவாசல் வைத்திருந்ததில் ஊர் சமுதாய கிணற்றில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடாமல் தண்ணீரை தன் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தியதாக ஊர்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.06 16:20:35 +0530

பொதுக்கூட்டத்தில் என் கணவர் தட்டி கேட்டார். மேற்படி ஊர் பொதுக்கூட்டத்தில் பன்னீர்செல்வம், ராமு, காளீஸ்வரன், மணி, ஐயப்பன், பச்சைப்பிள்ளை, கொன்னமுத்து, தியாகராஜன், மற்றும் முத்துவயிரான் ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள். அப்போதுதான் என் கணவர் தட்டிக்கேட்டார். அந்த ஊர்பொதுக்கூட்டத்தில் ஒருவாரத்தில் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று எனது கணவரை பார்த்து பன்னீர்செல்வம், காளீஸ்வரன் ஆகியோர் சொன்னார்கள். அதன்பின் ஊர்ப்பொதுக்கூட்டம் முடிந்தது. பின்னர் கடந்த 13.06.2000 அன்று எனது கணவர் காலை சுமார் 7.00 மணி பேருந்திற்கு சாமான்கள் வாங்குவதற்காக சிவகங்கைக்கு சென்றார். எனது கணவர் அவ்வாறு செல்லும்போது பகல் 1.00 மணியளவில் ஒய்யவந்தான் பேருந்து நிறுத்தத்திற்கு அவர் வாங்கி வரும் பொருட்களை கொண்டு வருவதற்காக என்னையும் என் தகப்பனாரையும் வரச்சொன்னார். அன்று பகல் 1.15 மணியளவில் ஒய்யவந்தான் பேருந்து நிறுத்தத்தில் பேருந்திலிருந்து என் கணவரும், எனது சித்தப்பா மகன் சுதாகர் என்பவரும் பேருந்திலிருந்து பொருட்களுடன் இறங்கினார்கள். மேற்படி அவர் கொண்டுவந்த பொருட்களை நானும் எனது தகப்பனார் காங்கேயவேல் என்பவரும் கையில் வாங்கிக்கொண்டு நாங்கள் இருவரும் நடந்து சென்றோம். எனது கணவரும் என் தம்பி சுதாகரும் எங்களுக்கு முன்னால் ஒய்யவந்தான் கண்மாய்க்குள் அவர்கள் முன்னால் செல்ல நானும் என் தந்தையும் பொருட்களுடன் பின்னால் சென்றோம். நாங்கள் சென்று கொண்டிருந்தபோது கண்மாய்க்கரைக்கு ஓரத்திலிருந்த புளிய மரத்தடியிலிருந்து எதிரிகள் பன்னீர்செல்வம், ராமு, காளீஸ்வரன், மணி, முத்து, பச்சைப்பிள்ளை, ஸ்டாலின், கோபு, ஐயப்பன் ஆகியோர் கூட்டமாக கையில் ஆயுதங்களை வைத்துக்கொண்டு வந்தார்கள். குறிப்பாக எதிரிகள் பன்னீர்செல்வம், ராமு, காளீஸ்வரன் ஆகியோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அருவாளுடனும், முத்து, மணி ஆகியோர்கள் கத்தியுடனும், பச்சைப்பிள்ளை என்பவர் சைக்கிள்செயினுடனும், ஸ்டாலின், கோபு, ஐயப்பன் ஆகியோர்கள் உருட்டுக்கட்டையுடனும் வந்தார்கள். அதில் பன்னீர்செல்வம் என்பவர் பஞ்சாயத்தில் என் பதவி போனதற்கும், நான் பொதுக்கிணற்றிலிருந்து காளவாசலுக்கு தண்ணீர் எடுப்பதற்கும் நீதான் எதிர்ப்பு தெரிவிக்கிறாய் என்று சொல்லி நீ இனிமேல் என்னை வாழவிடமாட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி உன்னை இப்போதே தீர்த்து கட்டுகிறேன் என்று சொல்லி முதலில் அருவாளால் தலையில் தாக்க முற்பட்டபோது என் கணவர் தடுத்ததால் என் கணவரின் இடது கை பெருவிரலுக்கு இடையில் காயம் ஏற்பட்டது. மறுபடியும் வெட்டியபோது இடது கையின் முழங்கை பகுதியில் காயம் ஏற்பட்டது. மறுபடியும் கழுத்து, தலை ஆகிய பகுதிகளில் வெட்டினார். மேலும் எதிரி காளீஸ்வரன் என்பவர் அவர் வைத்திருந்த அருவாளை எனது

கணவரின் தலைக்கு கொண்டு வந்தபோது தடுத்த என் கணவரின் இடது முழங்கை மேல்புறத்தில் காயம் ஏற்பட்டது. மறுபடியும் அவர் என் கணவரின் தலையில் நடு மண்டையில் மாறி மாறி வெட்டினார். மேலும் எதிரி ராமு என்பவர் தான் வைத்திருந்த அருவாளால் இடது கை மூட்டு பகுதியிலும், மறுபடியும் வெட்டியதில் இடது தொடைப்பகுதியில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. மறுபடியும் அவர் வெட்டியதில் என் கணவரின் இடது பக்க தலையின் பின்புறம் விழுந்தது. மேலும் வலது பக்க தோள்பட்டையிலும் அவர் வெட்டினார். எதிரி மணி என்பவர் அவர் வைத்திருந்த கத்தியால் என் கணவரின் வலது நெஞ்சுக்கு கீழும், விலா வயிற்றுக்கு பின்புறமும் குத்தினார். மறுபடியும் வலதுபக்க தோள்பட்டைக்கு கீழும் குத்தினார். எதிரி முத்து என்பவர் அவர் வைத்திருந்த கத்தியால் என் கணவரின் தொப்புளுக்கு கீழ் குத்தினார். மேலும் விலா வயிற்றுக்கு கீழும் குத்தினார். மேலும் என் கணவரின் இடதுபக்க தொடையின் பின் பக்கத்திலும் குத்தினார். மேலும் வலது பக்க தோள்பட்டையிலும் குத்தினார். என் கணவரின் முதுகிலும் அவர் மாறி மாறி குத்தினார். எதிரி பச்சைப்பிள்ளை என்பவர் அவர் வைத்திருந்த சைக்கிள் செயினால் என் கணவரின் கழுத்துப்பகுதியிலும், தொடைப்பகுதியிலும் அடித்து தாக்கினார். எதிரிகள் ஸ்டாலின், ஐயப்பன், கோபு ஆகியோர்களும் தாங்கள் வைத்திருந்த உருட்டுக்கட்டையால் என் கணவரின் உடம்பு முழுவதும் தாக்கினார்கள். என் கணவர் சாய்ந்த நிலையில் இதை தடுக்க ஓடிய என் தம்பி சுதாகரன் என்பவரை எதிரி பன்னீர் செல்வம் என் தம்பியின் மண்டையின் இடது பக்கம் வெட்டினார். எதிரி மணி என்பவர் என் தம்பியின் விலாப்பகுதிகளில் தான் வைத்திருந்த கத்தியால் குத்தினார். என் தம்பியின் முதுகிலும் குத்தினார். இதைப்பார்த்த நானும் என் தந்தை காங்கேயவேலு என்பவரும் கத்தினோம். எங்களது சத்தத்தை கேட்டு ஊரிலிருந்து என் சித்தப்பா குருபாதம், எனது மாமா மயில்வாகனன், அக்கா தாழையம்மாள் ஆகியோர்கள் சத்தத்தை கேட்டு ஓடி வந்தார்கள். அவர்கள் வந்ததால் எதிரிகள் அனைவரும் அந்த இடத்தை விட்டு அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களுடன் ஓடி ஒரு டிராக்டரில் ஏறி சென்றுவிட்டார்கள். அதன்பின்` எனது தந்தை காங்கேயவேலு என்பவரும் காளையார்கோவில் காவல்நிலையம் சென்று மேற்படி சம்பவம் குறித்து புகார் கொடுத்தார். தற்போது என் தந்தை உயிருடன் இல்லை. இங்கு என்னிடம் காட்டப்படும் புகார்வாக்கு மூலத்தில் உள்ள கையெழுத்து என் தந்தையுடையதுதான். மேற்படி புகார்வாக்குமூலம் **அ.சா.ஆ.1** குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து காவல்நிலையத்திலிருந்து என்னை விசாரித்தார்கள். அதற்கு பின்னால் ஒரு முறை திருச்சி மத்திய சிறைச்சாலை சென்று எதிரி கோபு, ஐயப்பன் ஆகியோர்களை அடையாளம் காட்டினேன். மேற்சொன்ன விவரங்களை போலீசர் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் இறந்த பழனி என்பவரின் இரண்டாவது மனைவி என்றால் சரிதான். தாழையம்மாள் என்பவர் எனது உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். மேற்படி தாழையம்மாள் என்பவர் தான் எனது கணவரின் முதல் மனைவி என்றால் சரிதான். இவ்வழக்கின் முதல்வழக்கு SC.No.5/2005 வழக்கில் ஒன்பது எதிரிகள் மீது வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் காங்கேயவேலு என்பவர் கொடுத்த புகாரில் எதிரிகள் எட்டு நபர்களின் பெயர்கள் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல ஒன்பது எதிரிகளின் பெயர்களையும் சொல்லியுள்ளார். இவ்வழக்கின் எதிரி அய்யப்பன் என்பவரின் பெயர் புகாரில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அய்யப்பன் என்பவர் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி SC.No.5/2005 வழக்கில், இவ்வழக்கில் உள்ள நான்கு எதிரிகளை தவிர மற்ற எதிரிகள் மேற்படி வழக்கை நடத்தி விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி SC.No.5/2005 வழக்கில் எனது தகப்பனார் காங்கேயவேலு என்பவர் முதல் சாட்சியாகவும், எனது சகோதரி தாழையம்மாள் என்பவர் 2வது சாட்சியாகவும் இந்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி எனது தகப்பனார் காங்கேயவேலு, எனது சகோதரி தாழையம்மாள் என்பவர்கள் விசாரிக்கப்பட்டபோது நானும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தேன் என்றும் என்னை சாட்சியமளிக்க அழைத்த போது எனக்கு சாட்சி சொல்ல விருப்பம் இல்லை என்று நான் சொல்லிவிட்டதால்தான் நான் சொல்லவேண்டிய சாட்சி dispense செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் அன்று நீதிமன்றத்திற்கு வரவேயில்லை. எனவே சாட்சி சொல்ல விருப்பமில்லை என்று நான் சொல்லவில்லை. எனது தகப்பனார் காங்கேயவேலு என்பவர் SC.No.5/2005 வழக்கில் சாட்சி சொன்னபோது " ***நான் எனது வீட்டிலிருந்த போது எனது மருமகன் பழனி கொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற செய்தியை நான் கேள்விப்பட்டேன். அவ்வாறு நான் கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே சம்பவ இடத்தில் ஊர் மக்கள் சுமார் 50 பேர்கள் கூடியிருந்தார்கள். நான் சம்பவ இடத்தில் இருந்தபோது கொஞ்ச நேரத்தில்' காளையார்கோவில்' போலீசார் அங்கு வந்துவிட்டார்கள். இவ்வழக்கில் இறந்த நபர் எனது மருமகன் என்பதால் காளையார்கோவில் போலீசார் சம்பவ இடத்தில் வைத்து என்னிடம் சில எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளை நான் பார்க்கவில்லை. நான் சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பாகவே ஊர்க்காரர்கள் யாரோ போலீசாருக்கு தகவல் சொல்லியுள்ளார்கள். அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் நான் வீட்டில் இருந்ததால் என் மருமகன் பழனியை யார் கொலை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது.***" என்று நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் சம்பவ

சமயத்தில் என் கணவர் அடிபடும்போது என் அப்பா காங்கேயவேலு என் உடன் தான் இருந்தார். நான் முதல்விசாரணையில் சொன்னவாறு இவ்வழக்கு தொடர்பாக என் தகப்பனார் காளையார்கோவில் காவல்நிலையம் செல்லவில்லை என்றும், அங்கு புகார்வாக்குமூலத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகார்வாக்குமூலம் என்பது இவ்வழக்கில் முதல்தகவல் இல்லை என்றும் அதற்கு முன்னதாகவே எங்கள் ஊர்காரர்கள் சம்பவம் குறித்து காளையார்கோவில் காவல்நிலையத்திற்கு புகார்கொடுத்து அதன் அடிப்படையில் காளையார்கோவில் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் அசா.ஆ.1 புகார்வாக்குமூலம் யாரால் எழுதப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. SC.No.5/2005 வழக்கில் எனது சகோதரி தாழையம்மாள் என்பவர் அசா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சகோதரி தாழையம்மாள் என்பவர் SC.No.5/2005 வழக்கில் சாட்சி சொன்னது எனக்கு தெரியும் என்றும் எனது சகோதரி அவரது சாட்சியத்தில் " 2000ம் வருடம் பகல் 1.30 மணிக்கு நான் வீட்டில் இருந்தேன். என் கணவரை தாக்கிவிட்டதாக என்னிடம் சொன்னவுடன் ஒய்யவந்தான் கண்மாய்க்கரைக்கு நான், என் தங்கை சீதா, என் சித்தப்பா மகன் சுதாகரும் சென்றோம் என்றும், நான் பார்க்கும்போது ஒய்யவந்தான் கண்மாய்க்கரைக்கு உள்வாய் புறத்தில் என் கணவர் பழனியும் என் தம்பி சுதாகரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள்" என்றும், அதே போல் தனது குறுக்குவிசாரணையில் "***என்தம்பி சுதாகர் சிவகங்கை மருத்துவமனையில் இருந்து இவ்வழக்கின் சம்பவத்தை கேள்விப்பட்டு நேராக நான் கண்மாய்க்கு போய் பார்த்தேன். நான் சென்று பார்த்தபோது என் கணவர் பழனியும், தம்பி சுதாகரும், இரத்தவெள்ளத்தில 'கிடந்தார்கள்.***" என்றும் சாட்சி சொல்லியுள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேலும் என் சகோதரி அவர் குறுக்குவிசாரணையில் "***எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இருபது ஆண்டுகளுக்கு மேலாகவே பேச்சுவார்த்தை இல்லாமல' இருந்து வருகிறோம். ஆஜர் எதிரிகள் அனைவரும் இருபது ஆண்டுகளுக்கு முன்பாக பிழைப்பிற்காக தஞ்சாவூர் பக்கமன் சென்று அங்கேயே நிரந்தரமாக குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான்.***" என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரியான அய்யப்பன் என்பவர் திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுகா, பேரளம் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் எங்கள் ஊரைச்சேர்ந்தவர் அல்ல என்றால் அது பற்றியும் எனக்கு தெரியாது. எனது சகோதரி தாழையம்மாள் என்பவரின் பிள்ளைகள் முத்துராஜா, கலைவாணன் ஆகியோர் என்றால் சரிதான். என் உடன்பிறந்த தம்பியின் பெயர் நாகலிங்கம் என்றால் சரிதான். ஆதீஸ்வரன் என்பவர் எனது கணவரின் சித்தப்பா பேரன் என்றால் சரிதான். பாஸ்கரன்

என்பவர் எனது கணவரின் சின்ன மாமனார் மகன் என்றால் சரிதான். பிரபாகரன் என்பவர் எனது கணவரின் மற்றொரு சின்ன மாமனார் குருபாதம் என்பவரின் மகன் என்றால் சரிதான். கொட்டகாட்சியேந்தல் என்ற பூவாக்கனி என்ற கிராமத்தில் SC.No.5/2005 இவ்வழக்கின்1வது எதிரி பன்னீர்செல்வம் தங்கியிருந்தபோது முத்துராஜா, கலைவாணன், நாகலிங்கம், ஆதீஸ்வரன், பாஸ்கரன், பிரபாகரன் ஆகியோர்கள் போலீஸ் உடை அணிந்து மாறுவேடத்தில் சென்று மேற்படி பன்னீர்செல்வத்தை 19.08.2011-ல் வெட்டி கொலை செய்துவிட்டதாக நரிக்குடி காவல்நிலைய குற்றஎண்.214/2011 இதச பிரிவு 302 மற்றும் சில பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி குற்றஎண்.214/2011-ல் அமர்வுவழக்குஎண்.164/2014 என்ற எண்ணிட்டு விருதுநகர் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அமர்வுவழக்குஎண்.164/2014 வழக்கு நிலுவையில் இருந்தபோது எங்கள் ஊர்காரர்கள் சேர்ந்து SC.No.5/2005 வழக்கையும் தற்போது நடைபெறும் இந்த வழக்கையும் சேர்த்து இருதரப்பினரும் மேல்நடத்தாது சமரசமாக முடித்துக்கொள்வோம் என்ற முடிவை நாங்கள் இருதரப்பினர்களும் ஒப்புக்கொண்டு அதன் அடிப்படையில் விருதுநகரில் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்ற அமர்வுவழக்குஎண்.164/2014 வழக்கின் கண்ணுற்ற சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியம் சொன்னதன் அடிப்படையில் மேற்படி வழக்கு விடுதலை செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பிறகு 1வது எதிரி காளீஸ்வரன், தாய்மாமன் முருகன் என்பவரும், இந்த வழக்கில் இறந்த பழனி என்பவரின் மகன் முத்துராஜா என்பவரும் 2022ல் நடைபெற்ற உடைகுளம் பஞ்சாயத்து தேர்தலில் வார்டு உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்து தேர்தலில் முருகன் என்பவர் வெற்றி பெற்று பஞ்சாயத்து துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்து தேர்தலை முன்விரோதமாக வைத்துக்கொண்டு ஏற்கனவே செய்துகொண்ட சமரசத்தை மீறி கடந்த 10 ஆண்டு காலமாக இந்த வழக்கில் காரணம் இல்லாமல் சாட்சி சொல்ல மறுத்து இந்த நீதிமன்றத்திற்கு வராமல் இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. என் ஊரான ஒய்யவந்தான் பேச்சாத்தகுடி ஊருக்கும் இந்நீதிமன்றத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மகன் மதுரையில் வழக்கறிஞராக உள்ளார் என்றால் சரிதான். நான் இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கில் சாட்சி சொல்வதற்கு பல வருடங்களாக நீதிமன்றத்தலிருந்து காளையார்கோவில் காவல்நிலையத்திற்கு பல சம்மன்கள் அனுப்பப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்நீதிமன்றத்திலிருந்து பல சம்மன்கள் அனுப்பப்பட்டும் நான்

பயந்துகொண்டே, வேண்டுமென்றே இந்நீதிமன்றத்தில் ஆஜராகாமல் சென்னை உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் கடந்த 10 வருடங்களாக பல மனுக்கள் தாக்கல் செய்துவந்தேன் என்றால் உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்தது சரிதான். ஆனால் இவ்வழக்கில் சாட்சி சொல்ல பயந்துகொண்டு அம்மனுக்களை தாக்கல்செய்யவில்லை. இந்த வழக்கில் எதிரிகளுக்கு உயர்நீதிமன்றத்தில் முதலில் ஜாமின் வழங்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி ஜாமின் மனுக்களில் வழக்கறிஞர் மூலம் நான் அவர்களுக்கு ஜாமின் வழங்கக்கூடாது என Intervener மனு தாக்கல் செய்தேன் என்றால் தெரியவில்லை. மேற்படி எதிரிகளுக்கு ஜாமின் வழங்கப்பட்ட பிறகும் அவர்கள் நான் சாட்சி சொல்லவருவதால் என்னை மிரட்டுவதாக கூறி ஜாமினை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்து அதன் பேரில் மேற்படி எதிரிகளுக்கான ஜாமின் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது கணவர் பழனி கொலை செய்யப்பட்டதற்கும் இந்த வழக்கின் 4வது எதிரியான அய்யப்பன் என்பவருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் அவர் எந்த சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி 4வது எதிரியான அய்யப்பன் என்பவர் இவ்வழக்கில் தன்னையும் சேர்த்துவிடுவார்கள் என்று பயந்துகொண்டு தானாகவே நீதிமன்றத்தில் சென்று சரணடைந்ததால் அவரை இந்த வழக்கில் 9வது எதிரியாக சேர்த்துள்ளார்கள் என்றால் அது தவறு. இவ்வழக்கின் 4வது எதிரியான அய்யப்பன் என்பவர் எனது கணவரை உருட்டுக்கட்டையால் தாக்கிய விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சமுதாயக்கிணற்றில் 1-வது எதிரியான பன்னீர்செல்வம் என்பவர் தனது செங்கல்சூலைக்கு தண்ணீர் எடுத்தது சம்மந்தமாக ஊர்க் கூட்டம் நடந்ததாகவும், அந்த கூட்டத்தில் என் கணவர் தட்டிக்கேட்டதாகவும் மேற்படி கூட்டத்தில் எதிரிகள் பன்னீர்செல்வம், காளீஸ்வரன், கொன்னமுத்து, ஹரிகரன் ஆகியோர்கள் கலந்துகொண்டார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி ஊர்க்கூட்டம் நடந்தது சம்மந்தமாக ஊர்பொதுமக்கள் கையெழுத்து போட்டார்களா என்றால் இல்லை. மேற்படி ஊர்க்கூட்டம் எந்த தேதியில் நடைபெற்றது என்றால் இந்த வழக்கு சம்பவத்திற்கு 10 நாட்களுக்கு முன்பு மேற்படி கூட்டம் நடைபெற்றது. தேதி குறிப்பாக ஞாபகமில்லை. எந்த தேதியில் மேற்படி ஊர்க்கூட்டம் நடந்தது என்றும் என் கணவர் கொலை செய்யப்படுவதற்கு முன்பு 10 நாட்களுக்கு முன்பாகத்தான் ஊர்க்கூட்டம் நடந்தது என்றும் போலீசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி ஊர்க் கூட்டத்தில் 1வது எதிரி பன்னீர்செல்வம் என் கணவரை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்ன விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா

என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி ஊர்க்கூட்டத்தில் நான் கலந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் சொன்ன மாதிரி 1வது எதிரி பன்னீர்செல்வம் தனது செங்கல்சூளைக்கு தண்ணீரை எடுக்கவில்லை என்றும் அது சம்மந்தமாக ஊர்ப்பொதுக் கூட்டம் எதுவும் நடக்கவில்லை என்றும் என் கணவர் ஊர்பொதுக்கூட்டத்தில் 1வது எதிரி பன்னீர்செல்வத்தை பார்த்து குறைசொல்லவில்லை என்றும் அங்கு பன்னீர்செல்வம் என் கணவரை பார்த்து ஒருவாரத்தில் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஊர்க்கூட்டத்தில் என் கணவரை பன்னீர் செல்வம் என்பவர் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியது சம்மந்தமாக காவல்நிலையத்தில் என் கணவர் புகார் கொடுத்தாரா என்றால் ஞாபகமில்லை. எங்கள் ஊர் பேருந்துநிலையத்திலிருந்து என் வீடு எந்த திசையில் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி, 200 அடி தூரத்தில் உள்ளது. நான் முதல் விசாரணையில் சொன்ன கண்மாய்கரை என்ற இடம் எங்கள் ஊர் பேருந்து நிறுத்தத்திலிருந்து எவ்வளவு தூரம், எந்த திசையில் உள்ளது என்றால் மேற்கிலிருந்து தெற்குப்பக்கம் 50 அடி தூரத்தில் உள்ளது. சம்பவ சமயத்தில் என் கணவர் பேருந்திலிருந்து இறங்கும்போது எத்தனை பேர் இறங்கினார்கள் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் பல பேர்கள் இறங்கினாாகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் எனது கணவருடன் பேருந்திலிருந்து என் தம்பி சுதாகர் தவிர வேறு யாரும் இறங்கவில்லை என்றால் ஆமாம் யாரும் இறங்கவில்லை. பேருந்து நிறுத்தத்திலிருந்து என் வீட்டிற்கு செல்ல கண்மாய்க்கரைக்கு செல்லத்தேவையில்லை என்றும் வேறு வழி இருக்கிறது என்றும் சொன்னால் சரியல்ல. வேறு வழியில்லை. நானும் என் தகப்பனாரும் சம்பவ தேதியன்று மேற்சொன்ன பேருந்து நிறுத்தத்திற்கு செல்லவில்லை என்றும் சாமான்களை என் கணவர் வாங்கிவரவில்லை என்றும் நாங்கள் அனைவரும் கண்மாய்க்கரை வழியாக சம்பவ சமயத்தில் சாமான்களை எடுத்துக்கொண்டு செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவ சமயத்தில் என் கணவர் என்னென்ன சாமான்கள் வாங்கிவந்தார் என்றால் என் அக்கா மகள் வயதுக்கு வந்த விசேஷத்திற்காக சாமான்கள் வாங்கினார். பலசரக்கு சாமானா அல்லது எந்த சாமான்கள் வாங்கி வந்தார் என்றால் உள்ளே என்ன சாமான் வாங்கி வந்தார் என்று நான் பார்க்கவில்லை. நாங்கள் சென்ற கண்மாய்க்கரை ஒத்தையடிப்பாதை என்றால் சரிதான். கண்மாய்க்கரைக்கு இரண்டு பக்கங்களிலும் பனைமரம், கள்ளி, முள்புதர்களும் ஆகியவை உள்ளது என்றால் புளியமரமும், புதர்களும் அடசலாக இருந்தது. பனைமரம் இல்லை. சம்பவ சமயத்தில் எனது கணவரும், தம்பி சுதாகரும் செல்லும்போது எதிரிகள் என் கணவரை பின்னால் வந்து வெட்டினார்களா அல்லது எதிரில் வந்து வெட்டினார்களா

என்றால் எதிரில் தான் வந்து வெட்டினார்கள். சம்பவ சமயத்தில் எதிரிகளை எவ்வளவு தூரத்தில் பார்த்தேன் என்றால் 100 அடி தூரத்தில் பார்த்தேன். சம்பவ சமயத்தில் எதிரிகள் வரும்போதே வெட்டுடா, குத்துடா என்று சத்தம்போட்டு வந்தார்கள் என்றால் ஆமாம். அவ்வாறு சத்தத்தையும் ஆயுதங்களை பார்த்து என் கணவரும் என் தம்பியும் திரும்பி ஓடிவந்தார்களா என்றால் இல்லை. எதிரிகள் அனைவரும் என் கணவரை ஒரே நேரத்தில் தான் வந்து வெட்டினார்களா அல்லது தனித்தனியாக வந்து வெட்டினார்களா என்றால் ஒருவர் பின் ஒருவராகத்தான் வந்து வெட்டினார்கள். மேற்படி என் கணவரை வெட்டும்போது நானும் என் தகப்பனாரும் பயந்து ஓடினோமா என்றால் ஓடவில்லை. அவ்வாறு என் கணவரை எதிரிகள் வெட்டும்போது நானும், என் தம்பி மற்றும் என் தகப்பனாரும் தடுக்க முயற்சித்தோமா என்றால் முயற்சித்தோம். எதிரிகள் வைத்திருந்த ஆயுதங்களை பறிக்க நாங்கள் யாராவது முயற்சி செய்தோமா என்றால் இல்லை. எதிரிகள் என் கணவரை வெட்டிவிட்டு ஆயுதங்களை எடுத்துக்கொண்டு அவர்களாகவே ஓடிவிட்டார்களா என்றால் அவர்களாகவேத்தான் ஓடிவிட்டார்கள். அவ்வாறு எதிரிகள் ஓடியபின்பு என் கணவர் கீழே கிடந்தாரா அல்லது நின்றுகொண்டிருந்தாரா என்றால் கீழே சாய்ந்து விழுந்துவிட்டார். அவ்வாறு விழுந்து கிடந்த என் கணவரை நானும் என் தகப்பனாரும் தொட்டு தூக்கினீர்களா அல்லது மேலே விழுந்து அழுதீர்களா என்றால் தொட்டு தூக்கினோம். அவ்வாறு என் கணவரை தொட்டு தூக்கும்போது என் உடை மீதோ, என் தம்பி சுதாகர் உடை மீதோ, என் தந்தை உடை மீதோ இரத்தக்கரை எதாவது பட்டதா என்றால் இல்லை. எதிரிகள் என் கணவரை வெட்டிவிட்டு ஓடியபின்பு மற்ற சாட்சிகள் எவ்வளவு நேரத்தில் வந்தார்கள் என்றால் கால் மணிநேரத்தில் வந்தார்கள். மேற்படி வழக்கு சம்பவம் குறித்து எனக்கு, என் தகப்பனார் காங்கேயவேலு, என் தம்பி சுதாகர் ஆகிய மூவருக்கு மட்டுமே தெரியும் என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தின் போது சம்பவ இடத்தில் நாங்கள் கொண்டு சென்ற சாமான்கள் சிதறிக்கிடந்தது என்றால் சரிதான். மேற்படி சிதறிக்கிடந்த சாமான்கள் போலீசார் சம்பவ இடம் வரும்வரை சம்பவ இடத்திலேயே கிடந்ததா அல்லது யாராவது எடுத்துச்சென்றார்களா என்றால் சம்பவ இடத்திலேயே தான் கிடந்தது. சம்பவத்தில் எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் சொன்ன மாதிரி எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றும் என் தகப்பனாரோ, என் தம்பியோ, நானோ வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் விசாரணையில் எதிரி காளீஸ்வரன் என் கணவரின் முழங்கையின் மேல்புறம் வெட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மறுபடியும் எதிரி காளீஸ்வரன் என் கணவரின் வலதுபக்க தோள்பட்டையில் மாறிமாறி வெட்டினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நடுமண்டையில் மாறி மாறி வெட்டியதாகத்தான் சொல்லியுள்ளேன்.

எதிரிகள் அய்யப்பன், கோபு ஆகியோர் என் கணவரை உருட்டுக்கட்டையால் மாறி மாறி அடித்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் கண்மாய்க்கரை வழியாக தனியாக சென்றபோது இனம் தெரியாத விரோதிகள் என் கணவரை வெட்டி காயப்படுத்திவிட்டார்கள் என்றும் என் கணவரை வெட்டியது யார் என்று எங்கள் யாருக்கும் தெரியாது என்றும் அந்த வழியாக சென்ற ஊர்க்காரர்கள் என் கணவர் வெட்டுப்பட்டுக்கிடப்பதை வீட்டிலிருந்த எனக்கும், என் அக்கா, என் தந்தைக்கும் தகவல் சொல்லித்தான் வீட்டில் இருந்த நாங்கள் சென்று பார்த்தோம் என்றும் என் தம்பி சுதாகர் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றும் அவருக்கு சம்பவ இடத்தில் வைத்து காயம் ஏற்படவில்லை என்றும், எதிரிகளுக்கும் எங்களுக்கும் இருந்த முன்விரோதம் காரணமாக எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் போலீசாரும் மற்றவரும் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.06 16:20:52 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை